Tamilnadu Ration Shop Jobs Notification Downloaded Form: www.Tamilanguide.in


# கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம்

## சேலம் மாவட்டம்

**கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் அலுவலகம்.**

**தளம்-4. அறை எண்.410. மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம். சேலம்-636001.**

அறிவிக்கை எண்.1/2017/டி.ஆர்.பி நாள் : 25.11.2017

சேலம் மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளில் காலியாக உள்ள பின்வரும் விற்பனையாளர் மற்றும் கட்டுநர் பணியிடங்களுக்கு தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 15.12.2017 பிற்பகல் 5.45 வரை வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | பதவி | சம்பள விகிதம் | கூட்டுறவு நிறுவனத்தின் வகைகள் | காலிப்பிணிட எண்ணிக்கை விபரம் |
|---|---|---|---|---|
| 1 | நியாய விலைக்கடை விற்பனையாளர் | தொகுப்பு ஊதியம் ஒரு ஆண்டுக்கு ரூ.5000/- அதனைத் தொடர்ந்து ஊதிய விகிதம் ரூ.4300-12000 | 1) சேலம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை | 11 |
| | | | 2) சேலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் | 3 |
| | | | 3) தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் | 101 |
| | | | மொத்தம் | 115 |
| **வ. எண்** | **பதவி** | **சம்பள விகிதம்** | **கூட்டுறவு நிறுவனத்தின் வகைகள்** | **காலிப்பிணிட எண்ணிக்கை விபரம்** |
| 1 | கட்டுநர் | தொகுப்பு ஊதியம்:- ஒரு ஆண்டுக்கு ரூ.4250/- அதனைத் தொடர்ந்து ஊதிய விகிதம் ரூ.3,900-11,000 | 1) சேலம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை | 22 |
| | | | மொத்தம் | 22 |

மேலே அறிவிக்கப்பட்டுள்ள விற்பனையாளர் மற்றும் கட்டுநர் பணியிடங்களுக்கு நேரடி நியமனத்தின் போது அரசுப் பணிக்கு இனச்சுழற்சி முறை பின்பற்றப்படுவது போல் விற்பனையாளர் மற்றும் கட்டுநர் பணியிடங்களுக்கு இனவாரி சுழற்சி முறை ஒவ்வொரு பணியிடத்திற்கும் ஒட்டுமொத்தமாகப் பின்பற்றப்படும்.

**மேற்படி பணியிடங்களுக்கான இனவாரி காலிப்பணியிட விவரம் பின்வருமாறு:-**

| பதவி | காலிப்பணியிட எண்ணிக்கை | பொதுப்போட்டி | பிற்படுத்தப்பட்டோர் | பிற்படுத்தப்பட்டோர் (இஸ்லாமியர்) | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் | ஆதிதிராவிடர் | ஆதிதிராவிடர் (அருந்ததியர்) | பழங்குடியினர் |
|---|---|---|---|---|---|---|---|---|
| விற்பனையாளர் | 115 | 35 | 31 | 4 | 23 | 18 | 3 | 1 |
| கட்டுநர் | 22 | 6 | 6 | 1 | 5 | 3 | 1 | — |

குறிப்பு : 1) தகுதியான பெண் விண்ணப்பதாரர்கள் இல்லையெனில் பெண்களுக்கான ஒதுக்கீடு தகுதிவாய்ந்த அதே வகுப்பைச் சார்ந்த ஆண் விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

2) மேற்படி நியமனங்களில் பெண்கள், மாற்றுத்திறனாளிகள், ஆதரவற்ற விதவை, முன்னாள் இராணுவத்தினர் மற்றும் தமிழ் வழியில் பயின்றவர்களுக்குரிய ஒதுக்கீடுகள் பின்பற்றப்படும்.

3) மேற்படி பணியிடங்களுக்கு பார்வைத் திறனற்ற மாற்றுத்திறனாளிகள் விண்ணப்பிக்க இயலாது. இத்திறனாளிகளுக்கான ஒதுக்கீடு பிற மாற்றுத்திறனாளிகள் கொண்டு நிரப்பப்படும்.

**2. தகுதிகள்:-**

அ) வயது (01.01.2017 அன்றுள்ள படி)

1. விண்ணப்பதாரர்கள் 18வயது பூர்த்தி அடைந்தவர்களாக இருக்க வேண்டும். (அதாவது 31.12.1998 அன்றோ அதற்கு முன்னரோ பிறந்தவராக இருக்க வேண்டும்)
2. விண்ணப்பதாரர்கள் 01.01.2017 அன்று கீழ்க்கண்ட வயது குறித்த தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| (i) | ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் இஸ்லாமியர் ஆகிய வகுப்பினைச் சார்ந்தவர்கள் | அதிகபட்ச வயது வரம்பு இல்லை |
| (ii) | மேற்படி வகுப்பினரை சாராத இதர விண்ணப்பதாரர்கள் | 30 வயதுக்கு மிகாமல் |

குறிப்பு : மாற்றுத்திறனாளிகள், முன்னாள் ராணுவத்தினர் மற்றும் ஆதரவற்ற விதவை ஆகியோருக்கு அரசு விதிகளின் உரிய வயது வரம்பு சலுகை வழங்கப்படும்.

**ஆ) கல்வித்தகுதி:-**

| பணியிடம் | கல்வித்தகுதி |
|---|---|
| விற்பனையாளர் | பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி (+2) அல்லது அதற்கு சமமான கல்வித்தகுதி |
| கட்டுநர் | பள்ளி இறுதி வகுப்பு / பத்தாம் வகுப்பு (SSLC) தேர்ச்சி |

குறிப்பு : விண்ணப்பதாரர்கள் இந்த அறிவிப்பு வெளியிடும் நாளன்று தமிழ் மொழியில் எழுத படிக்க போதுமான திறன் உள்ளவராக இருக்க வேண்டும்.

**3. தெரிவு முறை:-**

மேற்படி காலிப்பணியிடங்களுக்கான தெரிவு இந்த அறிவிக்கை மூலம் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பகம் மூலம் பெறப்படும் விண்ணப்பதாரர்கள் ஆகியோர்களுக்கு நடத்தப்படும் நேர்முகத்தேர்வில் பெறும் மதிப்பெண்கள் [illegible] தேர்வு செய்யப்படுவர். நேர்முகத்தேர்வில் பெறும் மதிப்பெண்கள் மற்றும் [illegible] வாரி சுழற்சி அடிப்படையில் காலிப்பணியிட எண்ணிக்கைக்கு ஏற்ப தெரிவு செய்யப்படுவர்.

Tamilnadu Ration Shop Jobs Notification Downloaded Form: www.Tamilanguide.in

Tamilnadu Ration Shop Jobs Notification Downloaded Form: www.Tamilanguide.in


விண்ணப்பதாரர்கள் நேர்முகத்தேர்வில் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும். நேர்முகத்தேர்விற்கு வருகை புரியாத விண்ணப்பதாரர்கள் மேற்படி தெரிவிற்கு கருத்தில் கொள்ளப்பட மாட்டார்கள்.

மேற்படி பணியாளர்களுக்கான தெரிவு குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் மாவட்ட ஆட்சேர்ப்பு நிலையத்தில் மேல்முறையீடு உரிய காரணங்களுடன் செய்யப்பட வேண்டும். மேற்சொன்ன காலக்கெடுவிற்குப் பின்னர் செய்யப்படும் முறையீடுகள் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.

**4. உடற்தகுதி சான்றிதழ்:-**

மேற்படி பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் அரசு உதவி மருத்துவர் நிலைக்கு குறையாத மருத்துவரிடம் பெற்ற உடற்தகுதிச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும். தகுதி பெற்ற கண் மருத்துவரிடம் பெறப்பட்ட சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும். மாற்றுத்திறனாளிகள் தங்களுடைய உடல் ஊனம் மேற்படி பதவிகளுக்கான பணியினைச் செய்வதற்கு தடையாக இருக்காது என்பது குறித்து மருத்துவ குழுமத்திடமிருந்து பெறப்பெற்ற சான்றிதழினையும் சமர்ப்பிக்க வேண்டும்.

**5. பணியாளர்களுக்கான விருப்பம் மற்றும் முன்னுரிமை தெரிவித்தல் :-**

விண்ணப்பதாரர்கள் தாங்கள் எந்த கூட்டுறவு சங்கத்தின் நியாய விலைக்கடைக்கு பணியமர்த்தப்பட வேண்டும் என்பதற்கான விருப்பத்தினை முன்னுரிமை அடிப்படையில் நேர்முகத்தேர்வில் கலந்துக்கொள்ளும் போது எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும். விண்ணப்பதாரர்களின் விருப்ப முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய இயலாத நிலை ஏற்பட்டால் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் காலிப்பணியிடம் அறிவிக்கப்பட்ட எந்தவொரு கூட்டுறவு சங்கத்தின் நியாய விலைக்கடைக்கும் ஒதுக்கீடு செய்யும் உரிமை பெற்றதாகும்.

**6. விண்ணப்பங்கள் விநியோகித்தல்:-**

அறிவிக்கப்பட்டுள்ள விற்பனையாளர்கள் மற்றும் கட்டுநர் பணியிடங்களுக்கான விண்ணப்ப படிவங்கள் பின்வரும் முகவரியிலுள்ள அலுவலகங்களில் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரத்தில் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

1. எஸ்.715, சேலம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை, சீத்தாராமன் சாலை, சேலம்.
2. 1494 சேலம் என்.ஜி.ஜி.ஓ.வினர் கூட்டுறவு பண்டகசாலை, டவுன் இரயில் நிலையம் அருகில், சேலம்.
3. சங்ககிரி நகர கூட்டுறவு வங்கி, சங்ககிரி.
4. ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், புதுப்பேட்டை, ஆத்தூர்.
5. மேட்டூர் அணை நகர கூட்டுறவு சங்கம், சதுரங்காடி, மேட்டூர்.

விற்பனையாளர் மற்றும் கட்டுநர் ஆகிய ஒவ்வொரு பணியிடங்களுக்கும் தனித்தனியே விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டும். இரண்டு பணியிடங்களுக்கும் சேர்ந்து ஒரே விண்ணப்பத்தில் விண்ணப்பிக்ககூடாது.

**7. விண்ணப்பக் கட்டணம்:-**

| பணியிடம் | விண்ணப்பக் கட்டணம் |
|---|---|
| விற்பனையாளர் | ரூ.150/- |
| கட்டுநர் | ரூ.100/- |

**8. கட்டண விலக்கு:-**

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் அனைத்து வகுப்பைச் சார்ந்த மாற்றுத் திறனாளிகள் மேற்கண்ட விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனர்.

**9. விண்ணப்பக் கட்டணம் செலுத்தும் முறை:-**

நியாயவிலைக்கடை விற்பனையாளர்கள் நியமனத்திற்கான விண்ணப்ப பதிவு கட்டணம் **ரூ.150/-** நியாய விலைக்கடை கட்டுநர் நியமனத்திற்கான விண்ணப்ப பதிவுக்கட்டணம் ரூ.100/-, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இந்த விண்ணப்ப பதிவு கட்டணம் செலுத்த தேவையில்லை. மேற்படி கட்டணம் **சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் தலைமையகம் மற்றும் கிளைகள் அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம், சேலம் மாவட்டம் (District Recruitment Bureau, Salem District)** பெயரில் வரைவோலையாக சேலத்தில் **மாற்றத்தக்க வகையில் (Payable at Salem)** எடுக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். விண்ணப்ப படிவத்தின் எண் மற்றும் விண்ணப்பிக்கப்படும் பதவிக்கான பெயர் மற்றும் விண்ணப்பதாரரின் பெயர் ஆகியவை வரைவோலையின் பின்புறம் எழுதப்பட வேண்டும்.

விண்ணப்பக்கட்டணம் செலுத்த வேண்டியவர்கள் விண்ணப்பத்துடன் வரைவோலை இணைக்கப்படாமல் விண்ணப்பங்கள் சமர்பித்தால் அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். ஒருமுறை செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டணம் எக்காரணம் கொண்டும் திருப்பி வழங்கப்படமாட்டாது.

**10. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:-**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் விண்ணப்பத்தில் குறிப்பிட்ட பிறந்த தேதி, கல்வித்தகுதி, இனம் மற்றும் சிறப்பு ஒதுக்கீடு கோரும் இனங்களுக்கு தேவையான சான்றிதழ்களின் நகல்களை இணைத்து அனுப்பவேண்டும். சான்றிதழ்களின் நகல்களில் சுய சான்றிட்டோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரின் சான்று பெற்றோ சமர்ப்பிக்கப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றிதழ்களை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பக்கூடாது. சான்றிதழ் நகல்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**11. நேர்முகத் தேர்வு:-**

நேர்முகத்தேர்வுக்கான அழைப்புக் கடிதம் விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படும். நேர்முகத்தேர்வு நடக்கும் நாள், நேரம் மற்றும் இடம் குறித்த விவரம் விண்ணப்பதாரர்களுக்கு பின்னர் தெரிவிக்கப்படும். நேர்முகத்தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்திற்கு விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய அனைத்து சான்றிதழ்களின் அசல் மற்றும் அவற்றின் நகல் ஒன்றுடன் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். நேர்முகத்தேர்வில் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும். நேர்முகத்தேர்வில் கலந்துகொள்ளாதவர்கள் எக்காரணம் கொண்டும் தெரிவுக்கு கருத்தில் கொள்ளப்படமாட்டார்கள் . மேலும், நேர்முகத்தேர்வில் கலந்து கொள்ளுவதால் மட்டுமே ஒரு விண்ணப்பதாரர் நியமனத்திற்கு உரிமை கோர தகுதியுடையவர் ஆகமாட்டார்.

**12. தடையில்லா சான்றிதழ்:-**

விண்ணப்பதாரர்கள் ஏற்கெனவே பணியில் இருப்பவர்களாக இருப்பின் அவர்கள் பணியாற்றும் அலுவலகத்திலிருந்து இப்பணியிடத்திற்கு விண்ணப்பிக்கவும், நியமனத்திற்கும் தடையில்லா சான்று பெற்று நேர்முகத்தேர்வு அன்று நேரில் சமர்ப்பிக்க வேண்டும்.

**13. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களைப் பெறுதல்:-**

அ 1. விண்ணப்பப்படிவம் விண்ணப்பதாரரின் சொந்த கையெழுத்தில் நீலம் அல்லது கறுப்பு நிற பந்துமுனைப் பேனாவால் **(Ball Point Pen)** பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

2. விண்ணப்பதாரரின் கையொப்பத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் விண்ணப்பதாரர் கட்டாயம் கையொப்பம் செய்து அனுப்ப வேண்டும். கையொப்பம் இடாமல் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பப்படிவத்தில் அனைத்து கலங்களும் விடுதலின்றியும் அடித்தல் திருத்தல் இல்லாமலும் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.
4. விண்ணப்பத்துடன் உரிய விண்ணப்பக்கட்டணம் (விலக்கு கோருபவர்களை தவிர) தவறாமல் செலுத்தப்பட்டிருக்க வேண்டும்.
5. விண்ணப்பதாரர் பாஸ்போர்ட் அளவு நிழற்படம் ஒன்றினை விண்ணப்படிவத்தில் ஒட்டுவதுடன் தனியாக ஒரு நிழற்படத்தினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் தேவையான சான்றிதழ் நகல்களுடன் சுயமுகவரியிட்ட **ரூ.22.00-க்கான** தபால் வில்லை ஒட்டிய **24x10** செ.மீ உறையினையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

ஆ. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை நேரிலோ தபால் மூலமாகவோ பின்வரும் முகவரிக்கு 15.12.2017 அன்று மாலை 5.45 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்குமாறு அனுப்பிவைக்க வேண்டும்.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**தலைவர்/மண்டல இணைப்பதிவாளர், கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம்,**
**கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் அலுவலகம்,**
**[illegible] IV, அறை எண் 410, [illegible] ஆட்சியர் அலுவலக வளாகம், சேலம்-636 001.**

15.12.2017 [illegible]

Tamilnadu Ration Shop Jobs Notification Downloaded Form: www.Tamilanguide.in

Tamilnadu Ration Shop Jobs Notification Downloaded Form: www.Tamilanguide.in


15.12.2017 அன்று மாலை 5.45-க்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அஞ்சல் தாமதத்திற்கான காரணங்களுக்கு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் பொறுப்பு ஏற்காது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**தலைவர்/மண்டல இணைப்பதிவாளர்,**
**கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம், சேலம் மாவட்டம்**

Tamilnadu Ration Shop Jobs Notification Downloaded Form: www.Tamilanguide.in